RMIC No. 4042


# திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

லர் 10 ‖ 9—3—52 ‖ இதழ் 36


# மண்டிக் கடையில்

## ஒரு மணி நேரம்!

[வண்டு]

சிய குறிப்பு:— இந்த
ழ்ச்சியில் குறிப்பி
ப்படும் 'ஸ்டோர்',
மால்', 'பழைய
டை' என்பவைக
க்கு வீணர்த்தம்
சய்து கொள்ள
வண்டாம்]

[சுதந்திர விலாஸ்-ஸ்டோர்' என்கிற போர்டு, மின்சார பல்புகளால் அலங்கரிக்கப்பட்டு ஜொலித்துக்கொண்டிருக்கிறது. முதலாளி மூக்கப்பிள்ளை, செல்லாத காலணா ஒன்றைத் தட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறார். கணக்கப்பிள்ளை, தெருவில் போவோரை பார்த்துக்கொண்டிருக்கிறார். எடுபிடிகள், உள்ளே, கொஞ்சம் ரவையையும் சர்க்கரையையும் கலந்து 'வயிற்றுக்குள்' அனுப்பிக்கொண்டிருக்கின்றனர்—சுவாரஸ்யமாக.]

ன்னண்ணேன்! ஏன் இப்படி
டுத்து கடை. யாரும் திரும்பக்
ாட்டேங்கிறாங்களே........"

ப்படிப்பா, வருவாங்க. ஊம்
ாஞ்சம் ரவை எடு"

பெரிய போர்டு மாட்டியிருக்
—எலெக்ட்ரிக் பல்ப் ஜொலிக்
—பிட் நோட்டீஸ் பறக்குது.
ல் எவனும் திரும்பமாட்டேங்
ன!"

ன் வர்றான் இங்கே! இந்த
யைப் பத்திலே......என்ன
ுளியுது"

"சேச்சே! தெரியாம சாப்பிட்டுட்டேனே-அண்ணே வாய் குமட்டுதே நீ சொன்னதும்"

"கொஞ்சம் புளியை எடுத்துப் போட்டுக்கோ"

[புளியை எடுப்பதற்காக புளி மூட்டையில் கை வைக்கிறான். ஏதோ, கையில் தட்டுப்பட்டு விழுந்தடித்து ஓடுகிறது]

"ஐயோ! எலி, அண்ணே......"

'பாத்திலே! இங்கே எலி மட்டுமோ இருக்கும்? யானை, புலி, கரடி கூட மறைஞ்சிருந்தாலும் இருக்கும்...ஊம்...புளியை வாயிலே போட்டுக்காதே"

[இந்த சமயத்தில், 'குலாம்' என்று கூப்பிடுகிறார்—முதலாளி ஐயா. அவன் போகிறான்—]

"குலாம்! நீ போயி — அவன் கடை எப்படியிருக்குன்னு — பார்த்து வா!"

"எங்கே, கோவாப்பரேடிவ் ஸ்டோருக்குங்களா?"

"ஆமாண்டா, கழுதே! கோவாப்பரேடிவ் ஸ்டோரர்ம் ஸ்டோரு!"

[குலாம் போகிறான் — மூக்கப்பிள்ளை, கணக்கப்பிள்ளையைப் பார்க்கிறார் —கணக்கப்பிள்ளை சுவாரஸ்யமாக 'பகுத்தறிவுப் போட்டி' கூபன்களைப் பூர்த்திசெய்து கொண்டிருக்கிறார்.]

"ஏன்யா! எப்படியிருக்குதாம், ஸ்டோர்"

"மேலிருந்து கீழ்..."

"என்ன......?"

[பகுத்தறிவு கூபன்களில் ஆழ்ந்திருந்த கணக்கப்பிள்ளை, முதலாளியின் குரல் கேட்டுத் திடுக்கிறார். 'மேலிருந்த கீழை' விட்டு விட்டு...]

"என்னங்க......"

"எப்படியிருக்குதாம்ணேன் — அவன்க கடை"

"ஏ! நீங்க ஒண்ணு — கவலைப்படாதீங்க. ஒண்ணும் வியாபாரமே நடக்கறதில்லையாம் — ஊரிலே எல்லாம் ஒரே கெட்டபேரு — யாரும் போறதே இல்லே"

"அப்படீன்னா, நம்ப கடை வியாபாரம் அதிகரிக்கணுமே"

[கணக்கப்பிள்ளை, பதில் கூற முடியாமல், பேச்சை வேறுதிசைக்கு ஒடிக்கிறார்]

"நம்ப அண்ணேக்குப் போட்ட 'பிட்நோட்டீசு'களெல்லாம் தீர்ந்துடுச்சாம் — ஒரு வீடு தவறாமே கொடுத்துட்டாங்க பசங்க"

"அதுக்கு குறைச்சல்லே! பணம் தான் பாழாவுது......"

"நான் பிரமாதமா எழுதிக் கொடுத்திருக்கேன் — இன்னொரு பத்தாயிரம் போடச்சொல்லிருக

கேன் — படிக்கட்டுங்களா, நோட்டீசை''

''ஊம்......ஊம்......''

''கோவாபரேடிவ் ஸ்டோர் — ஒரு பித்தலாட்டம். உருப்படாது, உதவாது. ஒரு கடை போதாதா நம்ப ஊருக்கு. பொதுமக்களே நம் பாதீர்கள் — இத்தனையும் தலைப்புங்க ... இனிமேலேதான் மேட்டரு...''

[இந்த நேரத்தில், கையில் பையோடு ஒருவர் வருகிறார். கணக்கப்பிள்ளையும் முதலாளியும், ஏக சமயத்தில 'வாங்க! வாங்க!!' என்று அழைக்கின்றனர். வந்தவர் உட்காருகிறார்]

''என்னங்க—ஊரிலே இல்லீயா!''

''இங்கேதான் இருக்கேன்—''

''ஏய்! யாரது? கோவிந்தனு — நீ போய், காபி வாங்கிட்டுவா—ஏங்க காப்பி சாப்பிட்டீங்களா! இல்லே— சோடா......''

[திகைக்கிறார் வந்தவர். மூக்கப்பிள்ளையா இப்படி உபசரிக்கிறார் என்று ஆச்சரியத்தோடு...]

''வேணுங்க! வேணுங்க!!''

''பரவாயில்லீங்க ... கோவிந்தா! வாங்கி வா, காப்பி......ஏன், இந்த பக்கமே வர்ரதில்லே....சாமான் கூட இங்கே வாங்க வர்ரதில்லை யாமே...''

''ஸ்டோரிலே வாங்குறேமுங்க.........நானும் ஒரு மெம்பருல்லே...''

[''ஆ...கா.. ...ங்'' என்று, பெருமூச்சுவிடுகிறார், முதலாளி, ஐயா. சிறிது நேரம், அமைதி. கணக்கப் பிள்ளை கேட்கிறார்.]

''சர்க்கரை என்ன விலைங்க...... ஸ்டோரிலே?''

''விசை 1—4—8...''

''வெள்ளையிலேயா?''

''வெள்ளை, கருப்பெல்லாம் ஸ்டோரிலே கிடையாது. நியாயமான விலைதான்...''

[''அப்படீங்களா?'' என்று கேட்டுவிட்டு மூக்கப்பிள்ளை, தமது புருவத்தைச் சுழிக்கிறார். வயதான காரணத்தால், நெற்றியிலே மடிப்பு விழுகின்றன...]

கண:- ஆகா! பார்த்தீங்களா... ஐயாவுக்கு நெற்றியிலே மடிப்பு விழுறத்தை...அழகாக இருக்குங்க, இது. இப்படியே, ஒரு 'போட்டோ' எடுக்கணும்க...

[சம்பந்தா சம்பந்தமில்லாமல், கணக்கப்பிள்ளை பேசுவதை, முதலாளி, அலட்சியமாக, கவனிக்காதது போலிருக்கிறார். வந்தவருக்கு, உள்ளுக்குள் சிரிப்பு — இத்தகைய ஆசாமியைப் பக்கத்தில் வைத்துக்கொண்டிருக்கும் முதலாளியைப் பார்த்து]

மூக்:- சாமான் வேணுங்களா?

வந்:- இல்லீங்க...

மூக்:- அப்புறம் எது விஷயமா வந்தீங்க...

வந்:- சும்மா, பார்த்துட்டு போகலாமேன்னுதான் வந்தேன்...

மூக்:- சரி—வணக்கங்க. ஞாபகம் இருக்கட்டும்.

[வந்தவர் போகிறார். முதலாளி, கணக்கப்பிள்ளையைப் பார்த்துக் கேட்கிறார்]

மு:- ஏன்யா! வந்தவன், எதிரின்னு தெரியுது...அப்பகூட என்னைப்பற்றித்தானே புகழறது...?

க:- உண்மையைச் சொன்னு என்னங்க...எதுக்காகங்க மறைச்சுப் பேசறது. ஐயாவொட அறிவும், உருவும்...

[குலாம், வருகிறான். அவனை, ஆவலோடு விசாரிக்கிறார், மூக்கப்பிள்ளை]

குலாம்:- போனேங்க... ...ஒரே கூட்டம்...

மூக்:- நிஜமாவா!

குலாம்:- ஆமாங்க... ...கூட்டம் நெருக்கித் தள்ளிகிட்டு நின்னுது... ஸ்டோர் காரியதரிசி வெளியே வந்தாரு ... எல்லோரையும் வேண்டிக்கிட்டாரு......'க்யூ'வா, நில்லுங்க அப்பத்தான் சவுகரியமாயிருக்கும். கட்டுப்பாடு வேணும்—ஒருத்தரை ஒருத்தரு ஏன் தள்ளிகனு... அப்படீன்னரு...

மூக்:- (ஆவலாக) கூட்டத்... கேட்கலியே?

குலாம்:- அதுதான் இல்லி... காரியதரிசி சொன்னதுதான் ... தம்—கொஞ்ச நேரத்திலே '... விலே எல்லாரும் நின்ன அழ... எஜமான்...ஏன், கேட்கிறீ... என்ன இருந்தாலும்...

மூக்:- சரி! சரி! மேலேசொல்லு

குலாம்:- நான் ஒரு பக்க... போய் நின்னுகிட்டு கடை... கவனிச்சேங்க....அவுரு வர்ரவு... கிட்டே பேசறதும், கடைசிப்ப... கள் கிட்ட நடந்துகிற முறை... சாமான்களை பற்றி எடுத்... சொல்ற விளக்கமும்...

[மூக்கப் பிள்ளை, மு... வியர்க்கிறது. ச... போடு, 'போது... போதும்!!' என்று... டுகிறார்!— குலா... அவன், தான் கண்டு... காட்சிகளைச் சொ... கோவிந்தனிடம் பே... றான். கணக்கப்பிள்ளை... கூப்பிட்டு, ரகசியமா... பேசுகிறார்.]

''என்னய்யா, இது! ந... நினைச்சதுக்கு நேர்மாறு இருக்...

(11-ம் பக்கம் பார்க்க)

## கண்டனம்

12-2-52ல் கோவையில், கா... ரஸ்காரர்கள் செய்த அட்டூழி... களைக் கண்டித்தும், 17-2-... 144 தடைபோட்டு பேச்சுரிமை... தடைசெய்ததைக் கண்டித்... கீழ்க்கண்ட, கோவை மாவட்... கிளைக்கழகங்கள், தீர்மானங்... நிறை வேற்றியுள்ளன. அ... சென்னைப்பிரதமர், ஜில்லாபோ... அதிகாரி, ஆகியோருக்கு அனுப்... பட்டிருக்கின்றன.

போத்தனூர்
சென்னிமலை
கொமாரலிங்கம்
சத்யமங்கலம்
உதகை
திருப்பூர்
புஞ்சைத்தலையூர்
ஆய்க்கவுண்டன்பாளையம்

# 'அறிவகம்' தந்த விருந்து

## மக்கள் தூதர்களுக்குப் பாராட்டு

## 'புது அத்தியாயம்' ஆரம்பம்

## தி. மு. க. வாழ்த்து

[அண்ணல்]

வெள்ளம் போல் திரண்டிருந் ரைக் கூறுவதா, வியர்வை த சிந்த ஜன்னல் கதவுகளிலும் யர்மான கட்டிடங்களிலும் த்திக் கிடந்தோரைப் பற்றிச் ல்லுவதா, ஆர்வத்தோடு அத் ஜனத் திரளும் அலைகளைப் ால அடிக்கடி கைகளைத் தட்டிக் ாண்டிருந்த காட்சியை விவரிப் , தாய்மாரின் கூட்டத்தை கூறு ா, தயங்காத உளம் படைத்த ிபர்களின் உணர்ச்சி வெள்ளத் த் தான் குறிப்பிட முடியுமா!

'இவர் இந்தத் தொகுதியில் ற்றி பெற்றவர்' என்று மதியழ ் சொல்ல, மலர் முகத்தோடு வற்றி பெற்றவர் நிற்க, மகிழ்ச்சி ாடு தி. மு. க. பொதுச் செயலா ் மலர் மாலை சூட்ட, 'வாழ்க! ழ்க!!' என்று மக்கள் மனதார ழ்த்த, தி. மு. க. ஆதரவோடு ்தலில் வெற்றி பெற்ற மக்களின் துவர்களுக்கு அளிக்கப்பட்ட த்தான வரவேற்பு, கண்களுக்கு ட்டுமல்ல — கருத்துக்கும் விருந் க இருந்தது.

4–3–52 சென்னை செயிண்ட்ஸ் மரி மண்டபத்திலே நடைபெற்ற ாட்டுக் கூட்டம் — நாட்டின் ழ்விலே, ஒரு புதிய அத்தியாய கும். மக்களால் தேர்ந்தெடுக்கப் ட்டோர் மக்கள் முன் சபதம் டுத்துக் கொண்டனர்! தாம் இந்த ந்தக் காரியங்களுக்காக சட்ட பையிலே பணியாற்றுவோமெனத் தெரிவித்துக்கொண்டனர்! "பொது க்களே! காங்கிரசை எதிர்த்து வெற்றி பெற்ற எங்கள் தொண்டு ாங்கிரஸை முறியடிப்பதோடு நின்று விடாது. காங்கிரஸ் வெட்டிய படுகுழியை மூடி, புது இடம் அமைப்போம்" எனத் திட்டவட்டமாக, தெளிவோடு தெரிவித்தனர்— ஒவ்வொருவராகச் சொல்லினர் இந்த உறுதி மொழியை.

மக்கள் முன் நின்று தத்தமது கருத்துக்களை, வெற்றி பெற்றோர் தெரிவித்தபோது, 'இவர்களையா உதிரிகள் என்றனர் — இவர்களா எதற்கும் பயன்படாதவர்கள் என்று செப்பினர், என்னே இந்தத் தேசிய ஏடுகளின் பித்தப் புத்தி;' என்று, எண்ணாதோர், இல்லை— அங்கே.

திராவிட முன்னேற்றக் கழக ஆதரவோடு, ஒப்பந்த ஏட்டில் கையெழுத்திட்டு, வெற்றி பெற்றோருக்கு — அன்று மாலை ராயபுரத்திலே உள்ள தி. மு. கழக மாளிகையில், தேனீர் விருந்து ஒன்று நடத்தப்பட்டது—தி. மு. கழகத்தால். அறிவகம், ஒளி மயமாயிருந்தது! கழக மாளிகையின் உச்சியிலே, பெருமிதத்தோடு பறந்த நமது கழகக் கொடியைப்போல, இதயமெல்லாம் குதூகலத்தோடு. நமது கழக முக்கியஸ்தரெல்லாம், பல்வேறு மாவட்டங்களிலிருந்து, "அறிவகத்திலே" நடமாடினர் — அவர்கள் மத்தியிலே, அலங்கரிக்கப்பட்ட, பெரியதொரு விருந்து ஒன்று, சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

விருந்து முடிந்ததும், யாவரும் வேகமாகத் திரும்பினர்— செயிண்ட்ஸ் மேரி மண்டபம். அங்கே, சட்ட சபை உறுப்பினர்கள் ஒருவர் பின்னொருவராகச் சேர்ந்து வந்து மேடையிலமர்ந்தபோது, மக்களின் மூச்செல்லாம் முழக்கமாக மாறிற்று — பேச்செல்லாம் வாழ்த்துக்களாயிருந்தன. புது சட்ட சபையினர்! நமக்குப் புது வழிகாட்டப் போவோர்! எனும் பூரிப்பால், மக்கள் மன்றம், மகிழ்ந்துக் கிடந்தது.

"இவர்தான் S. S. ராமசாமி — தென்னாற்காட்டுத் தீரர் உழைப்பாளர் கட்சிப் பிதா', 'அவர் யார் தெரியுமோ — துடிதுடிவெனப் பேசுகிறாரே அவர்தான் ராஜாசிதம்பரம், திருச்சித் தலைவர்', 'சாந்த முகத்தோடு ஆனால் தணியாத ஆர்வத்தோடு காட்சி தருகிறாரே அவர்தான் D. கிருஷ்ணமூர்த்தி, நெடுநாளைய சுயமரியாதைக்காரர்' 'இவர் திருப்பத்தூர் ராகவன், தீந்தமிழ் வீரர்' 'அதோ — புன்சிரிப்போடு வருகிறாரே அவர்தான் அரவக்குரிச்சி ரத்தினம்—,நமது மூச்சு', 'இதோபார்—துள்ளமாக மாணவர் போல காட்சிதருகிறாரே அவர்யார் தெரியுமோ — தசரதன், சிறந்த தொண்டர் தீவிரவாதி' 'ஏறு நடை போட்டு கூர்மையாக நம்மை நோக்குகிறாரே, அவர்தான் விக்கிரவாண்டி கோவிந்தசாமி, உழைப்பாளர் கட்சியின் காரியதரிசி— ஊக்கம் படைத்த வீரர்', 'பெருமிதத்தோடு வீற்றிருக்கும் அந்த உருவம் தெய்வசிகாமணி, காஞ்சியில் வெற்றிபெற்றவர் சென்னையின் மாஜி உதவி மேயர்', ஆர்வத்தோடு அமர்ந்திருக்கும் விநாயகம்—கூர்த்த மதிபடைத்தவர், விடுதலைவீரர்' 'கடலூர் ரத்தினத்தைப்பார் — அவர்தான். எழுத்துவன்மை மிக்கவர், இழிந்த சமுதாயத்துயர் தீர்க்கும் தொண்டர்', 'அதோ நகைச்சுவையோடு சிரித்துப் பேசிக்கொண்டிருக்கிறாரே, கல்லூரி மாணவரைப் போல, அவர்தான் ராதாகிருஷ்ணன்

### மகிழ்கிறோம்

கம்யூனிஸ்டுத் தோழர் மணலி கந்தசாமி உள்பட மூன்று சட்ட சபை, அங்கத்தினர்களை சர்க்கார் நிபந்தனையின்றி விடுதலை செய்திருப்பதை அறிய மகிழ்கிறோம்.

அண்ணாமலை நகர் வளர்த்த உருவம் அவர்' 'அவரோடு பேசிக்கொண்டிருக்கும் இளைஞர்தான் செஞ்சி அரங்கநாதன்— திகைக்கிறாயா? அவர் ஆர்வத்தைப்பற்றி செஞ்சி வட்டாரத்தைக்கேள், தெரியும்' 'அவருக்குப் பக்கத்தில் வாலிப மிடுக்கோடு அமைதியாக அமர்ந்திருக்கும் பரமசிவம் — சாதாரணமானவரல்ல, நல்ல சீர்திருத்தவாதி' 'இதோ ஒல்லியாக, சின்னஞ் சிறு மீசையோடு வருவதுதான் நமது பேபி — டாக்டர் சுப்பராயனைத் தோற்கடித்த சிங்கம்' 'சேனாபதியார் தெரியுமோ—அதோ வெள்ளையாடை உடுத்து புன்சிரிப்பும் சாந்தம் தவழும் முகத்தோடு காட்சியளிப்பவர்தான்' 'அரும்பு மீசையோடு வீர உருவம் ஒன்று வருகிறதே அதுதான் இளைய கோட்டை லட்சுமிபதி—இலட்சியக்காளை' 'திருவொற்றியூர் T.சண்முகம்இவர். இவரைத்தான் உனக்கே தெரியும்' 'விருத்தாசலத்தில் வெற்றிபெற்ற கட்டிமுத்து அவர்தான், காரியம் சாதிக்கும் காளை' 'அதுதான் மாயவரம் சம்பந்தம், மக்களின் தொண்டர்', 'சிந்தனை ரேகைகள் படர்ந்த முகத்தோடு வருபவர்தான் அரூர் துரைசாமி' 'அதோ, வேகமாக வருகிறாரே அவர் துறையூர் ரங்கசாமி வாதத்திறமையுள்ளவர்—தமிழ் பிம்பம்' 'கரூர் மாணிக்கசுந்திரம் யாரென்றாயே! அவர்தான்—எதற்கும் அஞ்சாத, விடுதலை வீரர் அவர். வேடிக்கையாகப் பேசுவார்' 'பெருமிதத்தோடு அமர்ந்திருக்கும் ஆரணி வி. கே. கண்ணனைப்பார்' 'திண்டிவனம்ஜயராமன் இவர்-தீவிரவாதி. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் பொதுஜனத் தொண்டர்' 'கடலூர் தொகுதியில் பார்லிமெண்டுக்கு வெற்றிபெற்ற கோவிந்தசாமி கச்சராயரைப் பார்த்தாயா? சாதுவைப்போல இருக்கும் அவர் கேள்விகள் கேட்டால தெரியும்........!' 'அதோ கல்லூரி மாணவர்போல கவலைபடா முகத்தோடு வருகிறாரே அவர்தான் முசிறி தங்கவேலு—வழக்கறிஞராயிருக்கிறார், சட்டக்கல்லூரியில் இரண்டாண்டுக்கு முன் நமது கூட்டங்களில் கண்டிருக்கலாமே!'

இவ்வித உரையாடல்கள், மேடையிலும் மண்டபத்திலும் நிறைந்திருந்தன. தி. மு. க. ஆதரவோடு வெற்றி பெற்றோரில் பலர், வழக்கறிஞர்கள் — சிலர் கல்லூரிகளிலே கர்ஜனை எழுப்பி, நமது கருத்தையெல்லாம் கவர்ந்த நண்பர்கள்— பலர், நகரசபை ஜில்லாபோர்டு ஆகியவைகளிலே பொறுப்புள்ள பதவிகள் தாங்கி நிர்வாகம் நடத்தும் திறமை படைத்தோர், இன்னும் சிலர் பொதுமக்களுக்காகதாம் வகித்த சர்க்கார் உத்யோகங்களை உதறித்தள்ளி, பொதுச் சேவை புகுந்திருப்பவர்கள், இத்தனை பேரையும் ஒவ்வொருவராக அறிமுகப்படுத்தியபோது மக்கள் ஆனந்த ஆரவாரம் செய்தார்கள்— அவர்தம் அறிவொளிவீசும் முகத்தையும் தீவிர நோக்கம் துள்ளி விளையாடும் வயதையும் கண்டபோது, மக்களின் கவனத்துக்கு, 'தோற்றுவிட்ட காங்கிரஸ் எம். எல். ஏக்கள்' கவனத்தில் வரவில்லை.

கடந்த சென்னை சட்டசபையின் நினைவு வரத்தான் செய்தது. ஒய்யாரமாகச் சென்று சட்டசபைநாற்காலிகளில், அமர்ந்து கைதூக்க வேண்டிய நேரத்தைத் தவிர்த்து மீதநேரமெல்லாம் கடலையைக்கொரித்தும், ஆரஞ்சுப்பழத்தை உரித்தும், அதுபோக மிஞ்சிய நேரத்தில் கண்ணைமூடித்தூங்கியும்,காலங்கழித்த 'கனதனவான்களின்' கவனம் வராமல் போகுமா?

அதனால்தான், தி.மு.க. பொதுச் செயலாளர் குறிப்பிட்டார், "நாம் இன்று மகிழ்ச்சியோடு இருக்கிறோம் என்றால் அதற்குள்ள காரணம் காங்கிரசை இவர்களெல்லாம் தோற்கடித்துவிட்டார்கள் என்பதால்மட்டுமல்ல. ஆனால் காங்கிரசைத் தோற்கடித்த இவர்கள் யார், என்பதை எண்ணும்போதுதான், [...]றோம். காங்கிரசை எதிர்த்து ச[...] ராச்சாரி வெற்றி பெற்றாரென்றா[...] சந்தோஷமா கொள்வோம்? டா[...]டர் சுப்பராயனைத் தோற்கடித்த[...] ஒரு தம்பிரான் என்றால் மகிழ்[...] சியா ஏற்படும் நமக்கு? சந்[...]னத்தை தோற்கடித்தது ஒரு ச[...] தனியென்றால் பாராட்டவா செ[...]வோம்? மாட்டோம்—மனமகிழ்[...] இப்போதுள்ளதுபோல் இருக்கா[...] இன்று நாம் மகிழ்கிறோமென்றா[...] காங்கிரசைத் தோற்கடித்தவர்க[...] யார் என்பதால்தான். காங்கிர[...] வீழ்த்திய இந்த உருவங்களை[...] பாருங்கள்—அவர் தாங்கிய கொ[...] கைகளை நினையுங்கள். இவர்களெ[...]லாம் முற்போக்குவாதிகள். நா[...] புதுமை பெறத் துடிக்கு[...] பொதுத்தொண்டர்கள். அதனா[...] தான் மகிழ்கிறோம்" என்று குறி[...]பிட்டார். மேலும் அவர் பேசுகை[...]யில், வெற்றிபெற்ற சுயேச்சை[...]யாளர்களைப்பற்றித் தூற்றல்பாண[...] விடுக்கும் துயர துந்துபிகளைப்ப[...] அவர்குறிப்பிடுகையில், "சுயேச்சை[...] வாதிகளைப் பார்த்து உதிரிகள் எ[...]றார்கள். கொள்கை யில்லாதவர்க[...] எனத்தூற்றின—சில பத்திரிகைக[...] உங்களையே கேட்கிறேன்! இவ[...]களா உதிரிகள்? நாடு விடுதலை[...] பெறவேண்டுமென எண்ண[...] கொண்டிருக்கும் இவர்களுக்[...] கொள்கை இல்லை? இந்த உதிரிகளை[...]களைக்கொண்டு, அழகான மாலை[...] நாம் தயாரித்திருக்கிறோம்[...]

---

## தி. மு. க. பிரச்சாரக்குழு

கூட்டங்களுக்குச் செல்லும் திராவிட முன்னேற்றக் கழக பிரச்சாரக்குழு நண்பர்கள், தாங்கள் சென்று பேசிய கூட்டங்கள்பற்றிய தகவல்களை உடனுக்குடன், பிரச்சாரக்குழு தி. மு. க. தலைமை அலுவலகம், காஞ்சி. என்ற முகவரிக்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து இதைக்கவனிக்கவேண்டுகிறேன்.

அன்பன்,

இரா. நெடுஞ்செழியன்,

செயலாளர்.

---

## இலக்குவனார்

விருதுநகர் செந்திக்குமாரநாடார் கல்லூரித் தமிழ்பேராசிரியர் சி. இலக்குவனார் M. O L. அவர்களைப் பொருந்தாக்காரணம் காட்டி கல்லூரியினின்றும் விலக்குவதை எதிர்த்து கல்லூரிமாணவர்கள் பிப் 28ந்தேதி, வேலைநிறுத்தம் செய்தனர். 'இலக்குவனாரை விலக்கமாட்டோம்' என்ற உறுதி மொழிதரப் படவேண்டும் என மாணவர்கள் தீர்மானம் நிறை வேற்றியுள்ளார்

# வடநாட்டு கவர்னர் வருகை

## 12-ந்தேதி கண்டன நாள்

### நாடெங்கும் நடத்துங்கள்

வடநாட்டு ஆதிக்கத்தின் அறிகுறியாகவும், காங்கிரஸ் பாசிச முறையின் கூறாகவும், சென்னை கவர்னராக ஒரு வடநாட்டுக் காங்கிரஸ் தலைவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். திராவிடநாடு திராவிடருக்கே என்ற கொள்கைக்காகப் போராடும் திராவிட முன்னேற்றக் கழகம், இந்த வடநாட்டு ஆதிக்கத்தை வன்மையாகக் கண்டிக்கிறது.

இன்றுள்ள நிலையில், திராவிட நாடு வடநாட்டுக்கு அடிமை என்ற நிலையை உறுதிப்படுத்தவும், அடிமைத்தனத்தை வளர்க்கவுமே, இந்திய அரசியல் சட்டம் பயன் படுகிறது. இந்த ஆதிக்கத்தை தி. மு. க. நாடெங்கும் விளக்கிக் கண்டிக்க வேண்டும். வடநாட்டு ஆதிக்கத்தைக் கண்டிக்க 12—3—52 அன்று நாடெங்கும் கண்டன நாள் கூட்டங்களை நடத்தி, இன்றுள்ள வடநாட்டு ஆதிக்கத்தை மக்களுக்கு எடுத்து விளக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

(1) வடநாட்டு ஆதிக்கம் கூடாது.

(2) கவர்னர் நியமனம் கூடாது — கவர்னர்களும் பொது மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

(3) காங்கிரஸ் கட்சித் தலைவர் ஒருவரை கவர்னராக நியமித்ததைக் கண்டிக்கிறோம்.

என்ற இந்த மூன்று கருத்துக்களைக் கொண்டே, கண்டன நாள் நடைபெற வேண்டுமென விரும்புகிறேன். எல்லாக் கிளைக் கழகங்களும் கண்டன நாள் நடத்தி திராவிடத்தின் தீர்ப்பை வடநாடு அறியச் செய்ய வேண்டுகிறேன்.

அன்பன்
**அண்ணாதுரை.**

---

...ல்லாத சர்க்கார் சென்னை மாகாணத்தில், நிறுவ, இவர்களின் ஒத்துழைப்பு கிடைக்குமென்றும்விளக்கினர்.

"காங்கிரஸ்தான் இந்த நாட்டை ஆளமுடியும். காங்கிரசைவிட்டால் கதியில்லை — என்றெல்லாம் கர்ஜித்தார் விருதுநகர் விசித்திர மனிதர்—தேர்தலின்போது. காங்கிரஸ்தான் ஆளமுடியும் என்ற கூற்றுக்கு இந்தத்தேர்தல் தக்கபதிலளித்துவிட்டது. இந்த வறட்டுஜம்பத்திற்கு பதிலளிக்கும் ஆசையோடாவது காங்கிரசல்லாத அரசாங்கம், குறைந்தபட்சம் ஆறுமாதமாவது ஆட்சி செய்யவேண்டும் என்பது என்விருப்பம்........"

"ஐக்கிய ஜனநாயக முன்னணி தயாரித்துள்ள குறைந்தபட்ச திட்டத்தை நான்கூர்ந்து கவனித்தேன் பல அம்சங்கள் வரவேற்கத்தக்கதாகவே உள்ளன. மத்திய சர்க்காருக்குள்ள அதிக உரிமைகளைக் குறைக்கவும், இங்கே வசூலிக்கப்படும் வரி முதலியவை இங்கே செலவிடப்படவேண்டுமெனவும் அதிலே குறிப்பிடப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். மக்களின் அடிப்படைத்தேவைகளான உணவு, உடை பிரச்சினைகளுக்கு முதன்மையும் அளிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தினடிப்படையில் கூட்டாட்சி அமையும் என்றே நான் நம்புகிறேன். ஆனால் அரசியல் வானில் ஏற்படும் மாற்றங்களால் அவ்வாறு ஒரு கூட்டாட்சி அமையத் தவறுமேயானால், இத்திட்டங்களை முன்வைத்து, இவர்களெல்லாம் ஒன்றுபட்டு எதிர்க் கட்சியாக இருந்து போராடத் தவறமாட்டார்கள்."

"காங்கிரஸ் கூடாரத்திலே கலக்கம் ஏற்பட்டிருக்கிறது. எப்படியாவது சர்க்காரிலிருக்க வேண்டும் என்ற ஆசைகொண்டு அலைகிறார்கள். எந்த சுயேச்சைகளை உதிரிகள் என்றும் வௌவால்கள் என்றும் வசைப்பாடினரோ அவர்களைச் சேரவருமாறு அழைக்கின்றனர்! 'காங்கிரசில் எவரையும் சேரவிடோம். கலப்பு சர்க்கார் அமைக்கமாட்டோம்' என்று கர்ஜனை எழுப்பியது எங்கேபோயிற்று என்று கேட்கிறேன். சுயேச்சைகள் நிச்சயம் காங்கிரசில் சேரமாட்டார்கள் நான் பல சுயேச்சையாளர்களைச் சந்தித்தவரையிலே, அவர்கள் காங்கிரசில் சேர்வதை குஷ்டரோகியைக் கட்டியணைப்பது போலவே கருதுகிறார்கள். அப்படி யாராவது சேர்ந்தாலும், காங்கிரஸ் குஷ்டரோகியைவிட, மகாமட்டமாகவே அவர்களைக் கருதுவர் — மக்கள்,"

இத்தகைய கருத்துக்களைத்தெரிவித்து, தி. மு. க. பொதுச் செயலாளர் பேசியபிறகு, ஒவ்வொரு சட்டசபை உறுப்பினரும்தத்தமது கருத்துகளைத் தெரிவித்துப் பேசினர். தமக்குப்பெரிதும் ஒத்துழைத்த, தி. மு. கழகத்துக்கு நன்றி தெரிவித்துச் சொற்பொழிவாற்றினர். அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"திராவிடத் தனியரசு ஏற்பட வேண்டும். இதற்காக, தி. மு. க. காட்டும் வழிகளில் செல்வதற்கு நாங்கள் தயங்கமாட்டோம். எங்கள் விருப்பம் நாம், நல்வாழ்வு பெற வேண்டும் என்பதுதான்".

—விக்கிரவாண்டி கோவிந்தசாமி
(T· N· T· காரியதரிசி)

"திராவிட நாடு வெகு விரைவில் கிடைத்துவிடுமென நம்புகிறேன். அதற்கான வழியும் சுலபமாகிவருகிறது. அது இன்னும் சுலபமாக வேண்டுமானால், காங்கிரசல்லாத ஆட்சி இங்கே ஏற்படவேண்டும். அப்படியேற்பட்டால் நிச்சயம் மத்தியசர்க்காருக்கும்நமக்குமுள்ள உறவு முறியத்தான் செய்யும்"

—ராஜா சிதம்பரம்
(திருச்சி மாவட்ட போர்டு தலைவர்)

---

(7-ம் பக்கம் பார்க்க)

திராவிடநாடு

காஞ்சி] 9—3—52 [ஞாயிறு

# "ஏனோ?"

✲

"எவ்வளவு வேண்டும்?"

"ஒன்பது லட்சம் டன், தேவை"

"அவ்வளவா?"

"ஐயோ—இதுகூட இல்லையென்றால் திண்டாட்டம்தான்"

"என் செய்வது! இந்த ஆண்டுக்கு 6,85,000 டன்தான் தரப்படும்"

டில்லியின் பதில் கேட்டு சென்னை கலங்கியிருக்கிறதாம். இதுபோன்ற கலக்கங்கள், அடிக்கடி ஏற்படுவதால், பலரது கவனம் இதில் செல்லவில்லை. ஆனால், மனித வாழ்வுக்கு இன்றியமையாத 'உணவு' நிலை, எவ்வளவு உதாசீனப்படுத்தப் படுகிறது டில்லியால் என்பதை, கவனப்படுத்த விரும்புகிறோம் சித்தூரிலே மக்கள்படும் கஷ்டத்தை 'தினமணி' புகைப் படங்கள்மூலம் காட்டுகிறது; நம் கண்முன்னே, சோறில்லாததால், மூன்று குழந்தைகளைக் கொலை செய்த 'தாராபுரம்' செய்திகள் தினசரி வந்துகொண்டே உள்ளன. ஆனால் டில்லி தெரிவிக்கிறது — கேட்டது தரமுடியாதென்று!

இந்த கேடுகெட்ட நிலையில் நாம் விழிக்கும் நேரத்தில், வேதனையான செய்தியொன்றையும் டில்லி, தெரிவித்துள்ளது. 'புது பட்ஜட்'படி, மாகாணங்களுக்கு கொடுத்துவந்த மான்யத் தொகை இனி தரப்பட மாட்டாதாம். வெளியிலிருந்து அதிக விலைக்கு வாங்கி, அந்த விலையை மககள்மீது சுமத்தாமல், எப்போதுமுள்ள விலைக்கு விற்பதால்—மாகாண சர்க்கார்களுக்கேற்படும் நஷ்டத்தை ஈடு செய்வது தான், இந்த மான்யத் தொகையால் கிடைக்கும் நன்மையாகும். இதுவும் பறிபோகிறது!

இந்த 'மோசத்தால்' ஏமாந்த சென்னை, பிப் 29ல் ஒரு உத்திரவு பிறப்பித்திருக்கிறது. சென்னை, மதுரை, கோவை, விசாகை ஆகிய நகரங்களிலுள்ள ஏழைமக்கள் தலையில் கைவைத்திருக்கிறது. அரிசி விலையை பட்டணம் படிக்கு, ஒன்றரை அணுவாகவும், கோதுமை விலையை நாலரையணுவாகவும் அதிகரித்திருக்கிறது.

இந்த உத்திரவுமூலம், மேலே குறிப்பிட்ட நான்கு நகரங்களைத் தவிர பிற இடங்களில், இப்போதுள்ள விலையைவிட அரையணு அதிகமாகிறது, கோதுமைவிலையில.

டில்லி, 'மான்யத்தை' நிறுத்தவே சென்னை, நம்மக்களின் வாழ்க்கையில் புயலை வீசச் செய்திருக்கிறது. டில்லிவாழ,நாம் மாள்கிறோம்!

மான்யத்தை நிறுத்தவேண்டிய அளவுக்கு, டில்லியில் பணமில்லையோ என்று பார்த்தால், கடந்த ஆண்டு வரவு செலவு கணக்குப்படி 93 கோடி மிச்சமாம் — தெரிவிக்கிறார், தேஷ்முக். மிச்சம் இருப்பது மட்டுமல்ல! மாகாணங்கள், டில்லிக்கு 'கொட்டியழும்' தொகையும் அதிகமாகியிருக்கிறது!!

டில்லிக்கு மாகாணங்கள் செலுத்தும் கலால், சுங்கம் ஆகிய இருவரிகள் மூலமும் வரும் ஆண்டில் முறையே 5-கோடியும் 76-கோடியும் அதிகமாக வசூலாகுமாம் இந்த 'அதிகம்' நாம் செலுத்தப்போவது தான்.

இருந்தும், டில்லி, ஏமாற்றுகிறது—நாம் ஏமாறுகிறோம்.

டில்லி கடந்த ஆண்டு, 11-கோடி ரூபாயை அதிகமாக, ராணுவத்துக்கென ஒழித்திருக்கிறது—வீண்ஜம்பத்தால் ஆனால் பசி தீர்க்க நமக்கு 'மான்யம்' அளிக்க முடியாதாம்!

இந்த வேதனையான செய்திகளினூடே மற்றொரு 'இடி'யைப்பற்றியும் கேள்விபடுகிறோம். நெல் கொள்முதல் அதிகமாகச் செய்ய வேண்டுமென்று அண்மையில் ஒரு கட்டளை விடுத்திருக்கிறது டில்லி—சென்னைக்கு. நெல் அதிகமாக உற்பத்தியாகும் தஞ்சை, கிருஷ்ணா, குண்டூர், மேல் — கீழ் கோதாவரி ஜில்லாக்களில் மணங்குக்கு ரூ. 1. வீதம், கொள்முதல் விலையை உயர்த்தும்படி. இந்த உத்திரவு மே மாதம் வரை அமுல் நடத்தப்படுமாம்.

டில்லியின் தாக்கிதை சிர...
கொண்டு சென்னை, உடனே இ...
உயர்வைப் பிரகடனப்படுத்தி...
கிறது. இந்த உயர்வால், ...
முதல் அதிகமாகலாம் என்ற...
லெண்ணத்தை வரவேற்கிறே...
ஆனால், இந்த உயர்வை யார் ...
பது? அரிசிவாங்கும் மக்கள்தா...

உத்திரவுபோடத் தெரி...
'டில்லி'க்கு; உதவிசெய்யவோ ...
மில்லை—ஊதாரித்தனமாக நட...
கொள்கிறது. இருந்தும் இங்...
ளோர் 'டில்லியே வேண்டும் எ...
றார்கள்—மத்தியசர்க்காரைமறு...
தீர்கள் என்று பிதற்றுகிறார்கள்...

வரியும் செலுத்தி, பலனுமில்...
மல், பயந்து பணிந்து, செத்...
தொலையும் இந்நிலை ஏனோ, நம...

★

## தி. மு. க. பொதுக்கு...

## 6—4—52-ல் ஈரோட்...

திராவிட முன்னேற்றக் கழ...
பொதுக்குழுக் கூட்டம் ஏப்ரல்...
தேதி ஈரோட்டில் நடைபெற...
பாடாகி இருக்கிறது பொதுக்...
உறுப்பினர்களுக்கு அழைப்பு ...
ரிக்கப்பட்டு வருகிறது ம...
மாநாட்டுக்குப் பிறகு கூடும் ...
பொதுக்குழுக் கூட்டத்தில் ...
சம்பந்தமான வேலைகள் குறித்...
கழக சட்ட திட்டத்தை ...
வேற்றி வைப்பதற்கான முறை...
பற்றியும், மாநில மாநா...
கணக்கு வகை பற்றியும், ...
தினத்தாள் குறித்தும் கலந்து...
வேண்டுமாகையால் 6—4—5...
நடைபெறும் பொதுக்குழுக் ...
டத்தில் பொதுக்குழு உறுப்...
கள் அனைவரும் கலந்துகொ...
வேண்டுகிறேன்.

அன்பன்

அண்ணாதுரை

★

5-ம் பக்கத் தொடர்ச்சி

"திராவிட நாடு அமைந்து மக்கள் சரிசமமாக வாழவேண்டுமென்பதை நாங்கள் விரும்புகிறோம். ஐக்கிய ஜனநாயக சர்க்கார் அமைய நாங்கள் ஒத்துழைப்போம். தி.மு.க.வும் அண்ணாவும் பாராட்டுவதோடு இருந்துவிடக்கூடாது—இதற்கான வழிகளை அடிக்கடி எடுத்துக் கூறவேண்டும்"

—S. S. ராமசாமி
(உழைப்பாளர் கட்சி தலைவர்)

"திராவிட நாடு பெறுவதற்காக தி.மு.க. கூறும் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றப் பாடுபடுவேன். பிரிவினைப் பிரச்சாரத்தை ஆந்திரத்திலும் சேரளத்திலும் செய்ய நாம் முனையவேண்டும். இதற்கான முயற்சிகளை, சட்டசபையிலிருக்கும் ஆந்திர, கேரளத் தோழர்களிடம் நான் செய்வேன்"

—D. கிருஷ்ணமூர்த்தி
(கிருஷ்ணகிரி)

"திராவிட நாட்டுப் பிரிவினையை திராவிடர் எவரும் மறுத்துவிட முடியாது. அதன்மூலமே நமது நாடு நலம்பெற முடியும் என நம்புகிறேன். அதற்கான பலத்தைத் திரட்ட, ஆந்திரத்தில், மிக்க முயற்சி எடுக்கப்படவேண்டுமென தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சியிலிருந்து நாம் போராடவேண்டும். அப்போதுதான், திராவிட நாட்டுப் பிரிவினையை, எளிதில் பெறலாம் என்று நான் கருதுகிறேன்"

—K. விநாயகம் B. A.
(செங்கற்பட்டு)

"உழைப்பாளர் கட்சியின் வெற்றிக்கான மூல காரணம் தி. மு. கழகந்தான். எங்களின் வெற்றிக்காக பல வழிகளிலும் பாடுபட்டார்கள். அவர்களுக்கு என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்"

—A. ரத்தினம்
(கடலூர்)

"நான் கட்டபொம்மன் பரம்பரையைச் சேர்ந்தவன். அந்நிய ஆதிக்கத்தை விரட்டப் பாடுபட்ட அந்தப் பரம்பரையைச் சேர்ந்த என்னால், நமது நாட்டில் இன்னொருவர் ஆதிக்கம் செலுத்துவதை அனுமதிக்கமுடியாது. வடநாட்டை எதிர்த்துப் போராட வாய்ப்பளித்த தி. மு. க.வுக்கு என்றும் கடமைப்பட்டவன்"

—S. இலட்சுமிபதி
(ஒட்டன்சத்திரம்)

"கூட்டு மந்திரிசபை அமைப்போம். முயற்சி வெற்றி தராவிடில், நல்லாட்சி நடைபெற, எதிர்க் கட்சியாக இருந்து, நமது திட்டங்களை வலியுறுத்தவோம்"

—K. R. சம்பந்தம் B.A.
(மாயவரம்)

"என்னை ஓட்டுக் கேட்கும் எம். எல். சி. அபேட்சகர்களைக் கூட, 'திராவிடநாட்டுப் பிரச்னையை ஒத்துக்கொள்வீர்களா?' என்று தான் கேட்டேன். சட்டசபையில் இலட்சிய வெற்றிக்காக, பாடுபட நான் தயாராக இருக்கிறேன்"

—ரங்கசாமி B.A., B.L.
(துறையூர்)

"தி. மு கழகத்தின் நாட்டுப் பிரிவினையைச் செயல்மூலம் காட்டுவோம், நாங்கள். இதற்கான திட்டங்களை அடிக்கடி எங்களுக்கு அண்ணா தெரிவிக்கவேண்டும்"

—ராதாகிருஷ்ணன் B.A.
(பண்ருட்டி)

"உதிரிகள் என்றும் இன்னும் பலவிதமாகவும் எங்களைத் தூற்றியோருக்கு பதில் தந்து, வெறும் புரளிப் பிரச்சாரத்தை மாற்றி, வெற்றி தேடிக் கொடுத்தது தி. மு. கழகமும், தளபதி அவர்களும்தான்"

—தசரதன்
(வந்தவாசி)

"தளபதி இதோ! போர்வீரர்கள் நாங்கள்! நாட்டுப் போருக்காக, எப்போதும் தயாராயிருக்கிறேன் நான். எங்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுகிறேன்"

—E. L. ராகவன் B.A., B.L.
(திருப்பத்தூர்)

"திராவிடம்—நமது நாடு. எத்தர் பிடியில் சிக்கிவிட்டது. இழிநிலையில் கிடக்கிறது, நமது சமுதாயம். இதை விடுவிக்க நான் போராடுவேன் — நல்வாழ்வுக்கு உழைப்பேன்"

—தங்கவேலு B.A., B.L.
(முசிறி)

"தி. மு. க. வின் விருப்பப்படி நாங்கள் எம். எல். ஏ.க்களாகிவிட்டோம். எங்களுக்கு, சட்டசபையில் போராட, அண்ணா யோசனைகள் கூறவேண்டும் அடிக்கடி. நான் வெற்றிபெற்றது, தி. மு. கழகத்தாலேயேதான்"

—T. சண்முகம்
(ஸ்ரீபெரும்புதூர்)

"வெற்றி பெற்றது நானல்ல—அண்ணாதான். தி. மு. க.வினால் நான் வெற்றி பெற்றேன் திராவிட நாட்டுப் பிரிவினைக்காக நான் எதையும் செய்யத் தயார்"

—எஸ். தெய்வசிகாமணி B.A.B.L.
(காஞ்சிபுரம்)

"எங்கள் வெற்றிக்காகப் பாராட்டியதோடு இருந்துவிடக் கூடாது, அண்ணாவும், தி. மு. கழகமும். தி. மு. கவின் கட்டளைக்குக் காத்திருக்கிறேன்"

—அரங்கநாதன்
(செஞ்சி)

"தி. மு. கழகத் திட்டங்கள் வெற்றிபெற என்னாலியன்றளவு பாடுபட தயங்கமாட்டேன்"

—துரைசாமி
(அரூர்)

"எங்களைப் பாராட்டுகிறார்கள்—தி. மு. க. தளபதி அவர்கள். உண்மையில் கூறவேண்டுமானால் வெற்றி பெற்றது அவர்தான்—நாங்களல்ல. எப்போதும் திராவிட நாட்டுக்காக உழைப்போம்"

—மாணிக்கசுந்தரம்
(கரூர்)

"எனது ஆசை, ஏழைகள் சமுதாயம் வாழ்வு பெறப் போராடும் தி. மு. கவின் திட்டங்களை யேற்று அதன்படி நடப்பதுதான்"

—கட்டிமுத்து
(விருத்தாசலம்)

"நான் எப்போதும் தி. மு. கவின் வெற்றிக்காகப் பாடுபடுவேன். நானும் எனது நண்பர்களும் சேர்ந்து அமைத்திருக்கும் திராவிட பார்லிமெண்டரி கட்சி, நமது கொள்கைகளுக்காகத் தீவிரமாகப் பாடுபடும். தி. மு. கழகம், திட்டங்களைத் தெரிவித்து உத்திரவிட வேண்டுகிறேன்"

—கே. என். ரத்தினம்
(அரவக்குறிச்சி)

"அகில உலகும் புகழ் பெற்றவர் என்று வர்ணிக்கப்படும் டாக்டர்

சுப்பராயனை, வோட்டர்லிஸ்டு கூட வாங்காது, தி. மு கழகத்தின் ஆதரவை மட்டும் துணைகொண்டு தோற்கடித்தவன் நான் தான். எனக்கு பல மொழிகள் தெரியும். என்னால் போய் டில்லியில் வாதாட முடியுமா — என்று எரிச்சல்காரர்கள், பேசினர், தேர்தலின்போது. உறுதியாகச் சொல்வேன்—தி. மு. கவும் அண்ணாவும் என்ன சொல்கிறார்களோ அதன்படியே நடப்பேன், டில்லியில். நான் படித்திருக்கும் எஸ். எஸ். எல். சி. படிப்பு டில்லியின் பி. ஏவுக்குச் சமானமாகும்! இந்திய ஜனாதிபதி தேர்தல் நடைபெறும்போது, அவரை போட்டியின்றி தேர்ந்தெடுக்க விடமாட்டேன். நானே வேண்டுமானாலும் போட்டி போடுவேன் — திராவிட நாட்டுப் பிரிவினைக்காகக் கீழே விழும் முதல் பிணம், நானாகத்தான் இருப்பேன்.

—எஸ். கே. பேபி
(திருச்செங்கோடு)

தத்தமது கருத்துக்களை வெளியிட்டு, மக்களின் தூதுவர்கள் பேசப் பேச, செயிண்ட்ஸ் மேரி மண்டபமே, அதிர்ந்தது — மகிழ்ச்சிக் களிப்பால். அமர்ந்திருந்த எம். எல். ஏக்களில், சிலர், பேச காலங் குறுக்கிட்ட தென்றாலும், அத்தனை பேரும், தம் முன் நிற்கும் கடமைகளை உணர்ந்தே பேசினார்கள்.

'போலோ பாரத் மாதாகி' அல்லவே, இவர்கள்! நாட்டின் புது யுகத் தூதர்களாயிற்றே!

"புது சட்ட சபை உறுப்பினர்கள்—நமது நாட்டிலே புது அத்தியாயத்தை ஆரம்பிக்கிறார்கள்" என்று தி. மு. க பொதுச் செயலாளர் குறிப்பிட்டதுபோல, தென்னாட்டில் காங்கிரசை ஒழித்து விட்டு வந்திருக்கும் புது முகங்கள் தானே அவர்கள்! ஆகவே, நம்மால், மக்கள் வாழ்வுக்கான வழிவகைகளைச் செய்யவேண்டுமென்ற ஆர்வம் அவர்கள் பேச்சிலும் மூச்சிலும் தென்பட்டது!

ஒவ்வொருவரும் திராவிட நாட்டுப் பிரிவினைக்காகப் போராடுவோம் என்று விளக்கினர்.

பிறகு, தி. மு. க. பொதுச் செயலாளர் தமது முடிவுரையில், காங்கிரசல்லாத கூட்டு சர்க்கார் அமைய வேண்டிய அவசியத்தைப் பேசியதோடு, காங்கிரஸ் சார்பில் பல பண முதலைகள், வலைவீசத் துவங்கியிருக்கும் போக்கைக் கண்டித்துப் பேசினார். பிறகு, கம்யூனிஸ்டுகளுக்கும் தி. மு. கவுக்குமுள்ள உறவை பற்றிக் கூறுகையில், "தி. மு. க. தேர்தல் காலத்தில் கம்யூனிஸ்டுகளை ஆதரிக்கவில்லை. காரணம் மதுரை தீர்மானம் தான். அதைக் கண்ட சிலர் சந்தோஷப் பட்டார்கள். இன்று மீண்டும் அவர்களோடு கூடுவதைக் காண கலங்குகிறார்கள். எங்களுக்கு திட்டங்கள்தான் முக்கியம். எனவேதான் இன்று நல்லாட்சிக்கான திட்டத்தை நானும் ஒத்துக்கொள்கிறேன்" என்று கூறினார்.

இந்தப் பாராட்டு விழா — திராவிடத்தின் 'புது அத்தியாயம்' ஆகும். எனவே, எல்லோரிடையிலும் மகிழ்ச்சி நிறைந்து கிடந்தது. பாசீச வெறியை ஒழித்து வெற்றி பெற்றிருக்கும் புது எம். எல். ஏக்கள், வளரும் புதுமையின் சின்னங்களாக விளங்கவேண்டும்.

தன்னைத் தவிர வேறு யாருமில்லை யென தருக்கோடு பேசிய காங்கிரஸ் முதுகெலும்பை முறித்த இந்த வெற்றிவீரர்களின், தொண்டு —மக்களுக்கான வகையில் வளர வேண்டும்.

நாம் ஆதரித்த பலர், மிக மிகச் சாதாரணமானவர்கள், பெரிய ஆலை அரசர்களோ, பண ஆசைகொண்டவர்களோ அல்ல. வாலிபர்கள் — பொதுமக்களோடு தொடர்புகொள்ளும் பேச்சாளர்கள்— வழக்கறிஞர்கள். இத்தகைய சிறப்பு பெற்றார், சட்டசபைக்குள், நுழையவிருக்கிறார்கள் — நாம் 'புது அத்தியாயத்தை'க் காணப்போகிறோம்.

இந்தப்புதுமை — சாதாரணமானதல்ல இதை எல்லோரும் உணர வேண்டும். அரும்பும் புதுமை
வளரவேண்டும் — 'மக்களின் தூது
வர்கள் எம். எல். ஏக்கள்' என்
புகழை நிலைநாட்டிக்கொள்ளவேண்
டும். மனிதன் புகழைப் பெறுவது
கடினம். இகழ்வைப் பெறுவது
சுலபம்.

மக்களின் ஆதரவைப் பெறுவது
எளிதல்ல — எரிச்சலைப் பெறுவது
மிக மிக சுலபம்.

இந்த உண்மையை மனதி
கொண்டு, தாம் எதற்காகப் போரா
டப் போவதாக, மக்கள் மன்றத்தி
அறிவித்திருக்கிறார்களோ, அந்த
காரியங்களுக்காக, தமது சட்ட
சபைக் காலத்தை செலவிட
வேண்டுமெனத் தெரிவித்துக்கொ
கிறோம்—அன்போடு.

"புகழ் விளக்கு எரியட்டும்
புகை மண்டலம் விலகட்டும்
தாயக விலங்கு ஒடியட்டும்
தாக்கும் சங்கடம் நீங்கட்டும்"

❀

## உண்மை

"இந்திய சரித்திரத்திலேயே, மத்யசர்க்கார் ஒன்றுக்குக் கீழ் இந்தியா முழுமையும் கட்டுப்பட்டிருப்பது, இப்போதுதான். முன்பிருந்த எந்த சக்கரவர்த்தியும் இத்தகைய ஆட்சியை நிறுவியதில்லை"

—பூனா நகரில் ராசேந்திர பிரசாத்

[பிப். 28]

## வருந்துகிறோம்

சேலம் நகர தி. மு. க. மு
னணி வீரரான தோழர் எம்.
வள்ளியப்பன், 1—3—52 கா
மாரடைப்பால் இயற்கையெய்தி
செய்தி கேட்டு திடுக்கிட்டோ
கடந்த இருபதாண்டுகளாக சுய
யாதை இயக்கத்திலிருந்து இன்
வரை, ஓய்வு ஒழிவின்றி அயரா
உழைத்தவராகும்.

தி. மு க. துவங்கிய காலமுத
அவரது சேவை பலமடங்கா
ஆயிற்று. சிற்றூர்களுக்கெல்லா
சென்று, நமது பிரச்சாரங்க
நடத்தி, பலகிளைக் கழகங்களை
துவக்கியவர். சேலம் மாவட்
மாநாட்டிலே, அவர் ஆற்றிய பணி
அளவிடற்கரியது.

சேலம் மாவட்டக் கமிட்டி உறு
பினராகவும், சேலம் அம்
பேட்டை மெயின்ரோடு தி. மு.
செயலாளராகவுமிருந்து பணிய
றிய இவரை, 42-வது வயதில், ச
நம்மிடமிருந்து பறித்துக்கொண்
விட்டது. மிகவும் வருந்துகிறோ
நமது ஆழ்ந்த அனுதாபங்க
அவர்தம் குடும்பத்தாருக்
சேலம் கழகத் தோழர்களுக்
தெரிவித்துக்கொள்கிறோம்.

## லாபமாம், லாபம்!

"இதற்குமுன் எப்போதுமே இவ்வளவு லாபம் கிடைத்ததில்லை"

என்று, இந்திய ரயில்வே வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்த அமைச்சர் கோபால்சாமி அய்யங்கார் அறிவித்திருக்கிறார். கடந்த ஆண்டில் 15 கோடியே 5 லட்சம் ரூபாய், மிச்சப்பட்டிருக்கிறதாம், ரயில்வே வரவு செலவில்! பெருமிதத்தோடுபேசியிருக்கிறார் அவர். ஆனால் இந்த மீதம் எப்படி ஏற்பட்டது? மக்கள்மீது வரிக்கட்டணத்தை அதிகமாக்கியதால்தானே! கடந்த ஆண்டில், அதற்கு முந்திய ஆண்டைவிட 26 கோடியே 66 லட்சம் அதிகமாக வசூலாகியிருக்கிறதாம், ரயில்வே இலாகாவுக்கு. கோடிக்கணக்கை, மகிழ்ச்சியோடு அறிவித்திருக்கிறார், அய்யங்கார்! எப்படி, ஏற்பட்டது இந்த லாபம்?

மண்டிக்கடை வியாபாரிக்கு, லாபம் அதிகம் வந்ததென்றால், காரணங்களிருக்கவேண்டும்—ஒன்று அதிக விலை; மற்றொன்று அதிக வியாபாரம், அடுத்தது, சாமான்களைக் குறைவாகத் தந்தது.

இதைப்போலத்தான் ஆகியிருக்கிறது—கடந்த ஆண்டில். ரயிலில் அதிக மக்கள் பிரயாணம் செய்தனரோ என்று புள்ளி விபரத்தைப் பார்த்தால். இத்தனை கோடி மிச்சப்படும் அளவில், ஏதும் உயரவில்லை.

கடந்த வருடம் 13077 கோடி 20 லட்சம்.

முன்வருடம் 12552 கோடி 60 லட்சம்.

இதுதான், ரயிலில் பிரயாணம்செய்தோரின் புள்ளி விபரம். இதே போல போக்குவரத்துத் துறையிலும், அதிக வாகின்கள் ஓடவில்லை.

ஆனால் லாபம் கிடைத்திருக்கிறது. எப்படி? ரயில்வே கட்டணத்தை உயர்த்தி, ஏழைமக்கள் பையில் கைவைத்தது. தொழிலாளர்களின் துயரங்களைத் துடைக்காது, மிரட்டியது. மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தராதது.

இந்த 'முதலாளி' மனப்போக்கால், இந்தியரயில்வே, தெய்மாங்கு

பார்க்கும்பொழுது, எவரும் பாராட்டமுடியாது. 'ரயில் நேரந் தவறிதான் ஓடுகின்றன' என்று மந்திரியாரே ஒப்புக்கொள்கிறார். அவ்வளவு தூரம், நிர்வாக ஊழலை, வளர்த்திருக்கிறது, அய்யங்காரின் ஆட்சி.

சர்க்காரின் ஸ்தாபனங்கள் மக்களுக்காகத்தான்பயன்படவேண்டும். ஆனால், இவர்களோ, 'வண்டிக்கடை' அதிபதிபோல் பணத்தைச் சுரண்டுகின்றனர்.

கடந்த ஆண்டில் இவ்வளவு

ஆண்டிலாவது கட்டணத்தை குறைக்கலாமே! அதுவும் இல்லையென்றால், தவிக்கும் ரயில்வேத் தொழிலாளியின் ஊதியத்தை உயர்த்தலாமே!!

இவை, எதையும் செய்யவில்லை—செய்யும் அறிகுறியும் தென்படவில்லை ஆனால் 'லாபம்' என்கிறார், நாமதாரி அமைச்சர்! என்று விடுபடுமோ, இவர்களிடமிருந்து இந்த ஸ்தாபனங்கள்! என்று பொது மக்கள் சுமை நீங்குமோ!!

★

## உறுப்பினராகுங்கள்

★

1. உறுப்பினராக விழைவோர், தி. மு. க. கொள்கைகளையும், இலட்சியங்களையும் ஏற்று கழக, சட்ட திட்டங்களுக்கு அடங்கி நடப்பேன் என்று தனித் தாளில் எழுதிக் கையொப்பமிட்டு, எட்டணாவும் அனுப்பி வைக்கவேண்டும்

2. குறைந்த எண்ணிக்கையுள்ள சிற்றூர்த் தோழர்கள் தனித்தாளில் உறுப்பினராவோர் கையொப்பம் பெற்று, கட்டணத்தையும் அனுப்பி வைப்பதே நல்லது.

3. இருபத்தைந்து உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு தொகையும், வசூலித்து அனுப்பிவிட்டால், ரசீது புத்தகம் உடன் கிடைக்கும்.

4. தலைமை நிலையத்திலிருந்து, மாவட்டக் கழகமும், தனிப்பட்ட கிளைக் கழகங்களும் நேரடியாக ரசீது புத்தகங்கள் பெற்றுள்ளன. அவை தாம்பெற்ற புத்தகங்களை முடித்து தலைமை நிலையத்திற்கு அனுப்பவேண்டும்.

5. மாவட்டச் செயலாளரிடமிருந்து ரசீது பெற்றோர், புத்தகத்தை முடித்து அதற்கான முழுத் தொகையோடு மாவட்டச் செயலாளருக்கே அனுப்பவேண்டும்.

6. உறுப்பினர் கட்டணம் எட்டணாவையும் தலைமை நிலையத்திற்கே அனுப்பிவைக்கவேண்டும்.

7. ஏப்ரல் திங்களில், நிர்வாகிகள் தேர்தல் நாடெங்கும் நடைபெறும். ஒவ்வொரு சிற்றூர்க்கிளையும், நிர்வாகிகள் விவரமும், உறுப்பினர் எண்ணிக்கையும் அனுப்பி தொகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

8. வட்ட, மாவட்டக் கழகங்களுக்குரிய தொகை, அவ்வமைப்புகள் புதிதாக ஏற்படும்வரை தலைமை நிலையத்திலேயே இருக்கும்.

9. உறுப்பினர் விபரம், முகவரி, சிற்றூர், வட்டம், மாவட்டம், ஆகியவற்றை மிகத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும்.

10. புத்தகம் முடிந்த பிறகு அனுப்புவதைவிட, சேரச் சேர அனுப்புவது நல்லது

உறுப்பினர் ரசீது புத்தகங்கள் அனுப்புக, அனுப்புக என்று எழுதும் கடிதங்கள் ஏராளம். அதுவும் ஏற்கனவே ரசீது புத்தகங்கள் பெற்றும் மேலும் வேண்டும் என்று எழுதும் மடல்கள் மிக மிக அதிகம். அவை, நம் ஆர்வத்திற்கு அளவுகோல். ஆனால், இவ்வளவு பேர்களைச் சேர்த்துவிட்டோம், தொகை அனுப்பியுள்ளோம், பெற்றுக் கொள்க என்று எழுதிடும் கடிதங்களே, நம் ஆக்கத்திற்குத் தூண்டுகோல் — அத்தகைய மடல்களே தலைமை நிலையத்திற்கு வந்து ஏராளமாகக் குவிய வேண்டும்.

விவரங்களுக்கு:—

**தலைமை நிலையம்,**
**திராவிட முன்னேற்றக் கழகம்,**
**காஞ்சிபுரம்.**

# சென்னையில் கருப்புக் கொடி

வடநாட்டுக் கவர்னருக்குக் கருப்புக் கொடி காட்டவேண்டும் என்று திராவிடர் கழகம் தீர்மானம்செய்து நாள் குறித்திருக்கிறது.

வடநாட்டு ஆதிக்கத்தை நாம் வெறுக்கிறோம் என்பதன் அறிகுறியாகக் கருப்புக் கொடி காட்டப்படவேண்டும் என்று திராவிடர் கழகம் கூறுவது, முற்றிலும் நியாயமானதும் அனைவரும் வரவேற்கவேண்டியதுமாகும்.

வடநாட்டுக் காங்கிரஸ் பாசீசம் திராவிடத்தின் எழுச்சியை அறிய இந்த கருப்புக் கொடி பிடித்தல் உண்மையாகவே ஒரு அரிய வாய்ப்பாகும்.

இதிலே கலந்து, வெற்றியை மேலும் வலுவுள்ளதாகச் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு இருக்கிறது.

ஆனால், கருப்புக் கொடி நாள் நடத்துவதாக அறிவித்திருக்கும் திராவிடர் கழகம், நாம் தீண்டுவதையும் தீண்டக்கூடாது என்ற திட்டத்தைத் தெரிவித்துவிட்டதால், தி. மு. க. இந்தக் கருப்புக் கொடி காட்டும் நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது கூட்டுறவு, ஒத்துழைப்பு, கலப்பு, தங்கள் முயற்சியைக் கெடுத்துவிட்டது என்று பழி சுமத்தவும் திராவிடர் கழகத்தில் பெரும்பகுதியினர் முன்வரக்கூடும். அவர்களும் கலந்துகொள்வதானால் அந்தக் காரியமே வேண்டாம், என்று ஒரு பகுதியினர் எண்ணக்கூடும். எனவே, திராவிடர் கழகம் தனித்தன்மையுடன் கருப்புக் கொடி காட்ட இடமளித்துவிட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தார் 12-3-52 அன்று நாடெங்கும் கண்டன நாள் நடத்தித் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணாதுரை

# அவமதிக்கிறார்

மக்களால் வெறுத்து வீசப்பட்ட மத்தியசர்க்கார் அமைச்சர் சந்தானத்தை, விந்தியப்பிரதேச கவர்னராக ஆக்கியது பற்றி கண்டித்தோமல்லவா? இதே கண்டனத்தை எழுப்பியிருக்கிறார்கள், புது டில்லியில்.

இந்தியப் பிரதமரை, பத்திரிகை நிருபர்கள், கேட்டிருக்கிறார்கள், 'தோற்கடிக்கப்பட்டவர், கவர்னராகலாமா?' என்று. அதற்குப் பண்டிதர் பதிலளித்திருக்கிறார்—ஜனநாயக உலகைக் கேலி செய்வதுபோல்!

'மந்திரியாக இருந்தாலென்ன, மதியூகியாக இருந்தாலென்ன, மக்களை மதியா உன்னை நாங்களும் மதியோம்'' என்று, மாயூரம் தொகுதி லட்சக் கணக்கான மக்கள், முடிவு கூறினார்கள்—தேர்தலின்போது.

அந்த முடிவை, அவமதிக்கிறார் நேரு! முடிவு தந்த லட்சக் கணக்கான வோட்டர்கள் — யாரோ சிலராம்—செப்புகிறார், ஆசிய ஜோதி. ''சென்னையிலுள்ள சில வாக்காளர்களால் அவர் தேர்ந்தெடுக்கப் படவில்லை யென்பதற்காக, அவருடைய சேவையையா — இழப்பது?'' — என்று கூறியிருக்கிறார். ரயில்வே இலாகாவில் அருமையாக வேலை செய்தாராம், சந்தானம்—கூறுகிறார் நேரு. என்ன அருமையோ அது—நமக்கெல்லாம் தெரியாதது—நாட்டின் பிரதமருக்குத் தெரிகிறது! ரயில்வே இலாகா முழுமையையும் 'நாமதாரி'களாக ஆக்கியது தவிர, எந்த 'அருமை'யையும் காணவில்லை நாம்—ஆனால், முடிசூடா மாணிக்கம் கூறுகிறார்!

சந்தானத்தைப் பாராட்டிவிட்டுப் போகட்டும்—ஆட்சேபமில்லை நமக்கு. ஆனால், அவரைத் தேர்ந்தெடுக்காமல் விரட்டிய மக்களை அவமதிக்கிறார் — ஜனநாயகத்தேர்தலை, அலட்சியமாகக் கருதுகிறார். நண்பருக்காக, நாவு, இவ்வளவு வேகமாக அசைவதா, ஒரு பிரதமருக்கு? சிலராம் சிலர்! Soine Electors in Madras — நேரு, கூறுகிறார் இப்படி! சந்தானத்தை வெறுத்து வீசியமக்கள் தீர்ப்பைவிட, தனது தீர்ப்பே மேலென்கிறார்—ஜனநாயகப்பற்றிப் பேசும் காந்தியவாரிசு, கூறுகிறது இவ்விதம்! தலைமைப்பதவி, இத்தகைய நெஞ்சுரத்தைத்தராது—இவருக்கு என எண்ணினோம்—ஆனால் சராசரிநிலையையும்தாண்டிவிட்டார்! ''வேண்டியோருக்கு ஏற்படும் இழிவு'' காண, ஏனோதானோக்கள், குதிக்கலாம்—குளறலாம் — கொந்தளிப்போடு பேசலாம். ஆனால் இவரா பேசுவது? நேருவா!—ஜனநாயகம் பேசும் நேருவா!!

# திராவிட பார்லிமெண்டரி கட்சி

'திராவிடப் பார்லிமெண்டரி கட்சி(Dravidian Parlamentary party) என்ற பெயரால் சட்டசபைக்குள் ஒரு கட்சி இயங்குமென்பதாகவும் அதில் இதுவரை 13-பேர் சேர்ந்திருப்பதாகவும், நண்பர்கள் மூலம் அறிந்தேன். இதைப்பற்றி கரூர் தோழர் ரத்தினம் முதலானவர்கள் என்னைக் கலந்தனர். இந்த முயற்சியை வரவேற்கிறேன், ஐக்கிய ஜனநாயக முன்னணியோடு சேர்ந்து பணியாற்றுவதே இதன் நோக்கமாக இருக்கும் என்றும் விரும்புகிறேன்'' என்பதாக 4—3—52 விழாவில் பேசிய தி. மு. க. பொதுச் செயலாளர் வெளியிட்டார்.

❀

# வருந்துகிறோம்

வயலிகிராமம் (நெல்லை) தி. மு. கழகச் செயலாளரான தோழர் வ. ச. சண்முகம் தனது இளம் பருவத்தில் 17-வது வயதில் திடீரென, சாவால் பிரிக்கப்பட்டாரென்ற செய்தி, நம்மைக் கலங்கச் செய்தது. மேற்படி கிராமத்தில் நமது கழகம் நிறுவி, பாடுபட்ட இளைஞர் அவர். மைந்தனை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தாருக்கும், அவரது சகோதரர் வேலுச்சாமிக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம் என அவ்வூர் தி. மு. க. வினர் தெரிவிக்கிறார்கள்.

*2-ம் பக்கத் தொடர்ச்சி*

ஸ்டோர் பலமாயிடும் போலிருக்கே..."

"அதெல்லாம் ஆகாதுங்க...பிட்நோட்டீசாலேயே ஒழிச்சுக்கட்டிடறேனுங்க..."

"ஒழிச்சு வாழ்ந்தோம். இந்தாய்யா, கணக்கப்பிள்ளை. வர வர எனக்குப் பயமாயிருக்கு......நம்ப கடைப் பயல்களே, அங்கேபோயிடுவாங்க போலிருக்கே!"

"நீங்க ஒண்ணு! இவனுகளாவது போவதாவது!"

"இல்லேய்யா—எங்க வீட்டுக்காரி மரகதமே சொல்ரு, நம்ம கடை சரக்கு நல்லால்லே—ஸ்டோர் சாமான் ஜோராயிருக்குன்னு! தெரியுமோ?"

"நாமும்,நல்ல சரக்கா,வாங்கிட்டு வர்றது......"

"வாங்கிட்டுவரலாம் — ஆனல் பணம்! பணமய்யா பணம்? என் வீட்டுதல்லே — நான், அல்ல, கொட்டியழணும்? அவனுகளுக்கு என்ன, கோவாப்பரேடிவ்ஸ்டோரு ...அப்படியில்லியே, நம்மது"

"ஆமாங்க... இருந்தாலும்..."

"நிலைமையை உணர்ந்து பேசணும்—ஊரிலே நம்மைப்பற்றி கேவலமா பேசருங்க. அதோபாரும் நம்ப கடைப்பசங்க பேசறது—காதிலே விழுதோ?"

[கடைக்குள்ளே குலாம், ஸ்டோரின் பெருமை பற்றி, கோவிந்தனிடம் சொல்லிக்கொண்டிருக்கிறன். 'என்னைப் பார்த்ததும் கேலி பண்ருங்க, கோவிந்தண்ணேன்! வெட்கம் பிடுங்கித்திங்குது. இங்கே இருந்துகிட்டு முதலாளிதிட்ட, ஊராரும் திட்ட அவஸ்தைப்படறதைவிட, அங்கே போனு......." இந்தப்பேச்சு, முதலாளிக்கும் கணக்குப்பிள்ளைக்கும், கேட்கிறது.]

"கேட்டீரா, பய சொல்றதை!"

"ஆமாங்க..........."

"இவன்களும் போயிட்டா....."

"போனு என்னங்க! வேறே ஆள் வச்சுக்குவோம்"

"சுலபமா சொல்றீர், நீர்! முடியற காரியமா? எவ்வளவு அருமையான பசங்க......எத்தனை வருசமா உழைக்கிறுங்க........ இவன்களைப் போல எவன்கிடைப்பான். கிடைச்சாலும், விஷயந் தெரிஞ்சவனு, எவன் அகப்படுவான்."

"ஆமாம்! ஆமாம்!! ஐயா சொல்றது—அத்தனையும் சரிதாங்க......"

"நான் ஒண்ணு செய்யறேன்!"

"என்னது?"

"சம்பளத்தைக் கொஞ்சம் கூட்டித் தந்துடுவோம் — சந்தோஷப்படுவாங்க, அதே சமயத்திலே, சில தடைகளையும் சொல்லிடுவோம்!"

"ரொம்ப நல்ல யோசனைங்க"

[மூக்கப்பிள்ளை, குலாமையும் கோவிந்தனையும் கூப்பிடுகிறுர். 'சந்தோஷமான தகவல்' என்று ஆரம்பித்து,'கடையிலே வியாபாரம் இல்லேன்னலும் உங்க உழைப்பைப் பாராட்டறதுக்காக மாசம் ரூ 1, உயர்த்திருக்கிறேன்' என்று விளக்கிவிட்டு, அவர்களிடம் சொல்கிறுர்.]

"சம்பளம் உயர்த்திருக்கேன் — சந்தோஷம்தானே!"

"ஐயா, முடிவுக்கு ஆட்சேபனை ஏதுங்க!"

"சரி—நான் சில சங்கதி சொல்வேன். அதன்படி நடக்கணும். நீங்க நடந்தாத்தான் நம்ம கடை வியாபாரம் பெருகும். வியாபாரம் பெருகின, உங்க சம்பளத்தை இன்னும் அதிகமாக்குவேன்......"

"சரிங்க..........."

[இதற்குமேல், கொஞ்சம் ஆசை காட்டிவிட்டு, தனது நிபந்தனைகளைச் சொல்கிறுர், மூக்கப்பிள்ளை. அந்த நிபந்தனைகள்.]

ஸ்டோர்பக்கம் போகக்கூடாது!

ஸ்டோரைப்பற்றி யாராவது பேசினல் கேட்கக்கூடாது!

ஸ்டோர் சாமான்களைப் பற்றி யாராவது புகழ்ந்தால், காதை மூடிக்கொள்ளணும்!

'நம்ம கடை உண்டு — நாமுண்டு'ன்னு இருக்கணும்!

[நிபந்தனைகளைக் கேட்டுக் கொண்டு அவர்கள்போகிறுர்கள்—ஸ்டோருக்குப போய்வரும் ஜனங்கள், ரோடில் திரள் திரளாகச் செல்கிறுர்கள். கணக்கப்பிள்ளை, காரசாரமாக சில வரிகளை எழுதுகிறுர்—முதலாளியிடம் காட்டுகிறுர்.]

'புதிய சரக்குகள்—தயார்!'

'போகாதீர்—ஸ்டோருக்கு'

'துரோகிகள் ஆகாதீர்'

'பழையகடை ஆகுமா?'

[முதலாளியும், சந்தோஷமாக, தலையாட்டுகிறுர், 'பிட்நோட்டீஸ்'போடச் சொல்லி.. குலாமும் கோவிந்தனும் உள்ளே இருக்கிறுர்கள் — அவர்கள்மீது தாவிபோடுகிறது ஒரு எலிக் குஞ்சு! அதுவந்த சாமான் மூட்டையைப் பார்க்கிறுர்கள் —கரப்பானும் வண்டும் அங்கே நிறைந்திருக்கின்றன!!]

*

## துவக்க விழாக்கள்

சேத்தியா தோப்பு: தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த இவ்வூரில் 29-2-52 அன்று தி. மு. க. துவக்கவிழா நடைபெற்றது. தோழர் அறிவழகன் தலைமைவகித்தார். தி. மு. க. பொதுச்செயலாளர் சி. என். ஏ. கழகத்தைத் துவக்கிவைத்துச், சொற்பொழிவாற்றினர்.

கோள்ளிடம்: (தஞ்சைமாவட்டம்) 2—3—52 அன்று தி. மு. க துவக்கவிழா நடை பெற்றது. அண்ணமலைப் பல்கலைக் கழக மாணவத்தோழர் அங்கப்பன் தலைமை வகித்தார். கழகஇலட்சியங்களை விளக்கி பல்கலைக் கழக மாணவ மணிகளான தோழர்கள் மு. அண்ணமலை, சிவனடியார், சம்பந்தம் ஆகியோர் பேசினர். காஞ்சி கே. டி. எஸ். மணி, இராம அரங்கண்ணல் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

# இந்தியின் கதி

★

நிருபர்:- இந்தியைப் பரப்ப, தீவிரமான நடவடிக்கைகளை—முன்னைப்போலவே, மத்திய சர்க்கார் தொடர்ந்து செய்யுமா?

நேரு:- ஏன், கேட்கிறீர்கள் — இப்படி.

நிருபர்:- தெற்கில் நடைபெற்றதேர்தலில் காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டிருக்கிறதே— அதனால் கேட்டோம்.

★

புது டில்லியில், கடந்த 28ந்தேதி இவ்விதம் கேட்டிருக்கிறார்கள் இந்தியப்பிரதமர் நேருவை—அதற்குப் பதிலளிக்கையில், 'மத்திய சர்க்கார் இந்தியைப் பரப்ப தீவிரமான நடவடிக்கைகளைக் கையாளுவதாக நீங்கள் சொல்லத்தான் கேள்விப்படுகிறேன்' என்று தெரிவித்திருக்கிறார். அதோடு,— அவர் தந்திருக்கும், சில தகவல்கள்:—

"இந்தியை பொதுமொழி யாக்குவதென்பது அரசியலமைப்பின்ஜீவாதாரத் திட்டமாகும்"

"இத்திட்டத்தை, தெற்கிலுள்ளவர்களோ அல்ல மற்றவரோ, ஏன் எதிர்க்கவேண்டும்?"

"இதை எப்படி நிறைவேற்றுவதென்பதில் கருத்து வேற்றுமைகளிருக்கலாம். ஆனால் எப்படியும் நிறைவேற்றித்தான் ஆகவேண்டும்"

"இந்தியாவை ஒரேநாடாக ஆக்க இந்தத் திட்டத்தைதவிர வேறுவழியில்லை"

"இதை சாமர்த்தியமாக செய்ய வேண்டும்—இல்லாவிடில் தொல்லைகள் உண்டாகத்தான் செய்யும்."

★

இந்தியாவை ஒரே நாடாக்க, எப்படியும் இந்தியை, பரப்பவேண்டும் என்று பகிரங்கமாக அறிவித்துள்ளார் — ஆனால் அதற்கான வழி முறைகள், கட்டாயமாக இருக்காதாம்! சாமர்த்தியமாகச் செய்யப்படுமாம்!!

இந்தியைப் பரப்புவதற்கென, டில்லி, கையாண்ட முறைகளை நாம் அறிவோம்—டில்லிக்குக் கீழ்ப்பட்டு இந்தியைத் திணிக்க, முயற்சித்த மாகாண சர்க்காருக்கும், தகுந்த புத்தியைத் தந்திருக்கிறோம், நாம். இருந்தும், நேரு சொல்லியிருக்கிறார் 'மத்திய சர்க்கார் இந்தியைத் திணிக்க, தீவிரமாக எதுவும்செய்யவில்லை, என்பதாக.

தீவிரமாகச் செய்யவில்லையென்பதை வாதத்துக்காக ஒப்புக்கொள்வோம்—இந்திப் பிரச்சார சபைகளுக்கென சர்க்காரும் ஒதுக்கி வரும் பணங்கூட இல்லையென்று கூறமுடியாது, அவரால்! அத்தகைய பிரச்சார சபைகளுக்கென, அள்ளிக்கொடுக்கப்பட்டு வருகிறது —டில்லியில்.

இவைகளின் மூலம் இந்தியைப் பரப்புவதைத்தான், நேரு, குறிப்பிடுகிறார் 'சாதுர்யமான வழிகள்' என்று.

இந்தச் சாதுர்யவழி, தந்திருக்கும் பலனைப் பாருங்கள் — இந்தத் தகவல், நாம் தரவில்லை; புது டில்லி தருகிறது 'தினமணி' மூலம்:—

புதுடில்லி பிப் 16:- நாட்டில் ஹிந்திப் பிரசார இயக்கம் அவ்வளவு சுறு சுறுப்பாக நடக்கவில்லை என்று கல்வி இலாகா கருதுகிறது. 1950 — 51ல் ஹிந்தியைப் பரப்புவதற்காக, பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட 170,000 ரூபாயை வேறு துறையில் செலவிட சர்க்காரிடமே திரும்பக் கொடுத்துவிட கல்வி இலாகா உத்தேசித்துள்ளது.

ஹிந்தி பாஷையில் பரிச்சயமே இல்லாதவர்கள் இந்த பிரச்சார இயக்கத்தை நடத்தியதுதான் காரணம் என்று அபிப்பிராயம் கூறப்படுகிறது.

★

சாதுர்ய வழியின், இலட்சணம் இது!

இந்தியைப் பரப்ப முனைந்தோரின் தகுதி—'பரிச்சயமே இல்லாதவர்கள்' அவர்களுக்கு சர்க்கார் ஆதரவு! பணம்!!

பலன் கிடைக்கவில்லையென்று—பரிதாபத்தோடு சொல்கிறது,டில்லி கல்வி இலாகா. ஆனால் நேருவோ, எப்படியும், பரப்பவேண்டும் என்கிறார்! பரப்பமுடியவில்லை — என, கல்வி இலாகா, 'பணத்தைத் திருப்பித்தருகிறது, அவரிடம்!!

"இந்தி பொதுமொழி — வீண் முயற்சி" என்று, நாம் போராடிய பொழுது, அலறிய தேசியத் தோழர்களுக்கு, இந்தஉண்மைகளை வைக்கிறோம். நாம் கூறியபோது, துப்பாக்கிகளைக் காட்டினர்—சிறைகளில் சித்திரவதை செய்தனர் — ஆனால் நேருவோ, 'திணிக்கவில்லையே!' எனச் செப்புகிறார் — 'சாதுர்யமாகச் செய்வோம்' என்கிறார் — அவரது கல்வி மந்திரி சபையோ 'சாதுர்யவழி பயன்படவில்லை—பணம் இந்தா' என்றுகூறுகிறது. விந்தையான கதி, இந்திக்கேற்பட்டிருக்கிறது! பரிதாபப்படுகிறோம் இந்தியின்கதி குறித்து! அனுதாபத்தோடு கூறுகிறோம், இன்னும் 'இந்தி பொதுமொழி' என்று எவரேனும் எண்ணியிருந்தால், எண்ணம் ஈடேறாது—தயவு செய்து மாற்றிக்கொள்ளுங்கள்!!

★

## சென்னை நிலை

| | |
|---|---|
| காங்கிரஸ் | 152 |
| சுயேச்சை | 63 |
| கம்யூனிஸ்டு | 61 |
| பிரஜா | 35 |
| உழைப்பாளர் | 19 |
| ரங்காகட்சி | 15 |
| சோஷியலிஸ்டு | 13 |
| காமன்வீல் | 6 |
| முஸ்லிம்லீக் | 5 |
| பார்வர்டுபிளாக் | 3 |
| தாழ்த்தப்பட்டோர்சம்மேளனம் | 2 |
| ஜஸ்டிஸ் | 1 |

சென்னை சட்டசபையின் மொத்த ஸ்தானங்கள் 375. இதில் பங்கு கொண்டுள்ள கட்சிகளின் நிலை இது.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press. 95, Tirukkachinambi St., Kancheepuram.